மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : திரு. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு தன்னுடைய சிபாரிசை அரசுக்குக் கொடுத்திருக்கிறது. 5—5—1969 அன்று பெறப்பட்டு, அது புத்தக வடிவத்தில் உறுப்பினர்கள் மேசையில் இன்றைக்குக் காட்சியளிக்கிறது.

THIRU K. VINAYAKAM : This report having been submitted to the Government some months back and having been printed in the month of May, may I know why there was such an inordinate delay in placing it on the table of the House?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலங்கடந்து கொடுத்ததற்குக் காரணம் என்ன என்ற கேள்வி இந்த மூலக் கேள்வியிலிருந்து வராது.

THIRU K. VINAYAKAM : Arising out of the answer given by the Hon. Minister. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சரி. உறுப்பினர் அப்படிப் பட்ட கேள்வியைக் கேட்க கூடாது என்று சொல்லவில்லை. ஆனல் அதைக் கேட்பதற்கு முறை வேறு. அது இப்பொழுது துணைக் கேள்வியாக வராது.

THIRU K. VINAYAKAM : Please listen to me. I am not trying to create trouble here and I have not come here for that purpose. I want more information from the Minister. May I know why there was such an inordinate delay in placing this report? I put a question and it is being answered today. It is strange that the placing on the table should coincide with the day on which the question I put is being answered.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஐந்தாம் தேதி, மே, 1969-ல் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அச்சடித்தது அல்ல. 5—5—1969 அன்று அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன் பிறகு அச்சடிக்க நேரம் வேண்டும்.

Sarkarpathy Power House

* 222 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the inflow of water to the Sarkarpathy power house was interrupted about the 4th November 1968 due to the fall of a live Elephant into the reservoir?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் நமக்கு அந்நியச் செலாவணியைத் தேடிக் கொடுக்கின்றன. சரியாக வேலி போடாததால் தான் இம்மாதிரி யான இழப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இனி இம்மாதிரி இழப்பு ஏற்படாமல் இருக்க தடுப்பு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தடுப்பு நடவடிக்கை எடுக்க ரூ. 27,200 செலவாகும். முள் வேலி போடவேண்டும் என்பதுதான் திட்டம். அதைப் போட்டால் சரியாகிவிடும்.

தமிழ்நாடு மின்சார வாரியம்

*** 223 வினா.—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார இணைப்பு வழங்குவதற்கு, மின்சார இணைப்பு பெறுவோரிடம் கடன் பெறுவது என்ற மின்சார வாரியத்தின் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், விவசாய உடைமைகளின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) & (இ) : மின்சார இணைப்பு பெற விரும்புபவர்கள் தாமாகவே முன் வந்து வழங்கும் கடன்களைத் திரட்டுவதற்கென தமிழ்நாட்டு மின்சார வாரியம் வகுத்தனுப்பிய ஒரு திட்டத்திற்கு 23—9—1968 அன்று அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. இந்த ஆணை இப்போது திரும்பப் பெறப் பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கேள்வியில், 'விவசாய உடைமைகளின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டதா' என்றதற்கு பதில் கொடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அவற்றையெல்லாம் ஆராய்ந்து தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

*** 224 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்சார கம்பங்கள் தயாரிப்பதை மின்சார வாரியமே தயாரித்துக் கொள்ள அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : மின்சார வாரியத்துக்குத் தேவையான வலுப்படுத்தப்பட்ட சிமெண்ட் கற்கலவைக் கம்பங்கள் (R.C.C. Poles) மின்சாரத் துறையாலும் ஒப்பந்தக் காரர்கள் மூலமாகவும் தயாரிக்கப்படுகின்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அப்படி யிருந்தும், சிதம்பரம் தாலுகாவில் இன்னமும் மின்சாரக் கம்பங்கள் இல்லை என்று பொதுமக்கள் மத்தியில் ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கிறது. என்னுடைய ஊரிலேயே அப்படி யிருக்கிறது. ஆகவே, உடனடியாக இல்லாத ஊர்களுக்கு கம்பங்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அந்த அபிப்பிராயம் தவறான அபிப்பிராயம் என்று கூறிவிட்டார்களே.